JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, BHAVANI

Deposition of LW- -Dw- 1- Witness
for Prosecution

STC No. 329/2023 Crime No. - Station -

| | | | |
|---|---|---|---|
| Name | **Dw1 குணசேகரன்** | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 29.05.2026 | | | |

**புகார்தாரர் ஆஜர் இல்லை. புகார்தாரர் தரப்பில் மனு அளிக்கப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது.**

நான் இந்த வழக்கின் எதிரி ஆவேன். நான் நீலகிரியில் உள்ள கீழ் குந்தாவில் வசித்து வருகிறேன். நான் முள்ளிமலையில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு 2019 ஆம் வருடம் எனது பள்ளி மூலம் விளையாட்டு பிரிவில் உள்ள கோச்சர் வெங்கடேஷை எனக்கு தெரிந்தது. மேற்படி வெங்கடேசன் ஊட்டியில் தான் வசித்து வருகிறார். எனக்கு மொத்தம் மூன்று குழந்தைகள். அதில் முதல் குழந்தை ஜென்னி 100% disability. உடல் ஊனமுற்று சிகிச்சை பெற்று வந்தார். எனது மகளுக்கு மருத்துவ செலவுக்காக நான் வெங்கடேசிடமிருந்து ரூ.1,00,000/- பணம் வாங்கி இருந்தேன். மேற்படி வெங்கடேஷ் தன்னிடம் பணம் இல்லை என்றும், கவுந்தப்பாடியில் உள்ள மகுடேஸ்வரி என்பவரிடமிருந்து பணம் வாங்கி தருவதாக என்னிடம் கூறினார்.

மேற்படி வெங்கடேஷ் எனக்கு மகுடேஸ்வரியிடமிருந்து ரூ.1,00,000/- பெற்றுக் கொடுத்தார். அவர் கொடுத்த ரூ.1,00,000/- பணத்திற்காக என்னிடம் உள்ள எனது இரண்டு காசோலைகளையும், எனது மனைவியின் இரண்டு காசோலைகளையும் மற்றும் நான்கு கடனுறுதிச் சீட்டுகளையும் வாங்கிக் கொண்டார். மேற்படி ரூ.1,00,000/- பணத்திற்கு மாதம் அசலில் ரூ.3000/-மும் வட்டியாக ரூ.3000/- மொத்த ரூ.6000/- கொடுக்க வேண்டும் என பேசிதான் எனக்கு ரூ.1,00,000/- பணத்தை கொடுத்தார். நான் வாங்கிய ரூ.1,00,000/-

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.05.29 18:06:26 +0530

பணத்திற்கு மகுடேஸ்வரிக்கு மாதாமாதம் ரூ.6000/- செலுத்தி வந்தேன். மேற்படி மகுடேஸ்வரி நான் கொடுத்த காசோலைகளில் ஒன்றினை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்தும், மேலும் எனது மனைவியின் காசோலையை எனது மனைவியின் பெயரில் ஈரோடு காசோலைகள் விரைவு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

மேற்படி, நான் வாங்கிய பணத்திற்கு வட்டியுடன் சேர்த்து அனைத்து பணத்தையும் எனது வங்கி மூலம் மகுடேஸ்வரி வங்கி கணக்கிற்கு அனுப்பினேன். இந்த வழக்கின் புகார்தாரர் வடிவேலு என்பவர் எனக்கு யார் என்றே தெரியாது. புகார்தாரர் கூறுவது போல், நான் அவரிடம் எந்த பணமும் வாங்கவில்லை. அதற்கு ஆதரவாக எந்த காசோலையும் நான் அவருக்கு கொடுக்கவில்லை. மகுடேஸ்வரி வட்டிக்கு மீறி அதிக பணம் கேட்டதால், நான் தரமாட்டேன் என்று சொன்னேன். அதற்கு மகுடேஸ்வரி இந்த வழக்கின் புகார்தாரரை வைத்து எனது காசோலையை மோசடியாக நிரப்பியும், இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

மேலும் மகுடேஸ்வரியிடம் வெங்கடேஷ் ரூ.2,00,000/- பணத்தை வாங்கிக் கொண்டு, அதில் எனக்கு ரூ.1,00,000/- கொடுத்துவிட்டு எனது காசோலை மற்றும் எனது மனைவியின் காசோலையை கொடுத்து என்னை அவர் ஏமாற்றியுள்ளார்.

**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

புகார்தாரர் ஆஜர் இல்லை. புகார்தாரர் தரப்பில் மனு அளிக்கப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது. புகார்தாரர் தரப்பில் வழக்கறிஞர் யாரும் ஆஜர் இல்லை. இருப்பினும் நீதியின் பால் கருதி, புகார்தாரரின் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.05.29 18:06:32 +0530

Sd/- (J.RAJKUMAR)

**Judicial Magistrate No.1, Bhavani**